மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி தட்டச்சர் திருமதி.பூமாதேவி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

பெயர்:	விஜயகிருஷ்ணன்	தொழில் :	
த.பெ:	வேலுச்சாமி	சமயம் :	
கிராமம்:		சாதி :	
வட்டம்:		வயது :	

28.03.2022 OS No. 23/2019 வா.சா.1 விஜயகிருஷ்ணன்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

தாவா வழக்கின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் சர்வே எண். 166/1ஏ மற்றும் விஸ்தீரணம் 54 செண்ட் ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 54 செண்டை நான் அனுபவம் செய்வதற்கு ரசீது செலுத்தியுள்ளேனா என்றால் காலி இடமாக உள்ளது. அதில் பூஸ்தி பாதை என்று பொதுமக்கள் சென்று வருகிறார்கள். அது எவ்வளவு இடம் என்று எனக்கு தெரியாது. அதுபோக மீதி இடம் காலிஇடமாக உள்ளது. என் தகப்பனார் வேலுச்சாமி 1ம் பிரதிவாதிக்கு பால்வளசங்கத்திற்காக முத்து என்பவருக்கு தாவா சொத்தில் 10 செண்டை கிரையமாக எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி 10 செண்டில் தான் பால்பண்ணை உள்ளது என்றால் சரியல்ல. முத்து இறந்துவிட்டார். அவரது மகன் தெய்வேந்திரன் என்பவர் ரைஸ்மில் மற்றும் கடை வைத்து அனுபவித்து வருகிறார். நான் மானாமதுரையில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பூவந்தி கூட்டுறவு பால்சங்கம் அதன் மானாமதுரை கூட்டுறவு பால்வழங்கும் சங்க தனிஅதிகாரியை எதிர்மனுதாராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இந்த பிரதிவாதி தரப்பில் எதிர்உரை மற்றும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. அந்த வழக்கை நான் மேல்நடத்தவில்லை. மானாமதுரையில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் அதே வழக்குமூலத்தில் புதிய வழக்கை தாக்கல் செய்ய அனுமதிக்கோரி மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மானாமதுரையில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கிற்கு விரோதமாக புதிய வழக்குமூலத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த வழக்கு வேறு. இந்த வழக்கு வேறு ஆகும். இந்த வழக்கை நான் புதிய வழக்காக தாக்கல் செய்கிறேன். மானாமதுரையில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

மு.வ.எண்.150/2003க்கு விரோதமாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த வழக்கு வேறு. இந்த வழக்கு வேறு ஆகும். நான் மேற்படி சொத்தை அனுபவித்து வருவதை காட்ட என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் 11 கிரைய ஆவணங்கள் உள்ளது. என் அப்பா கிரையம் கொடுத்துள்ளார். அதுபோக மீதியுள்ள 54 செண்டிற்குதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 54 செண்டை அனுபவம் செய்வதற்கு ரசீது இல்லை என்றால் காலிஇடமாக உள்ளது. 54 செண்ட் எனது அனுபவத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. என் அனுபவத்தில்தான் உள்ளது. அதை ஆக்கிரமைக்க வந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன்.

ம.வி இல்லை.

Taken down by me in open court
readover/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.